# மரிரேமபற்று பிரதேச சபை

## முல்லைத்தீவு மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 18 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 12 இல் சமர்ப்பிக்கப்ட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 மே 14 இல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய மரிரேமபற்று பிரதேச சபையானது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் தலைவருக்கு வழங்கப்பட்ட என்னுடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கங்களைத் தவிர, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய மரிரேமபற்று பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பதிலுள்ள குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்களில் பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியானவற்றிற்கும் இடையிலான வித்தியாசத்திற்கான விளக்கங்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தலமை அலுவலகம் மற்றும் உப அலுவலகம் என்பவற்றின் கீழ் நிதிக் கூற்றுக்களில் வருமானம் மற்றும் செலவினம் வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்பட்டோரின் காலப்பகுப்பாய்வு, வைப்புக்கள் மற்றும் பகுதிகளிலுள்ள வருமானம் நிதிக் கூற்றுக்களிற்கு இணைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானம், சொத்துக்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானம் | | செலவினம் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப் பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | - | - | - | - | 01 | 2,768,809 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 1,719,164 | 01 | 4,790 | - | - |

### 1.3.3. கணககாய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 31,064,472 மொத்தமான கொடுக்கல் வாங்கல்கள் வேண்டப்பட்ட தகவல்களை கணக்காய்விற்கு வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான ரூபா 2,001,409 தொகையான மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமான மிகையை ஒப்பிடும் போது 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமான மிகை ரூபா 6,112,606 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 61 | 187 | - |
| (ii) | குத்தகை வாடகைகள் | 7,900 | 6,170 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 390 | 558 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 14,918 | 19,126 | 175 |

### 2.2.2. நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

(அ) மாகாண சபை பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 1,109,250 ஆகும்.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்காக பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பீடு செய்து கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முக்கியமான மீள்குடியேற்ற வேலைகளிற்கு அப்பாற்பட்டவற்றில் ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தருக்கு ரூபா 550,028 தொகையான சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செலவினம் கொடுப்பனவிற்கு பாதீட்டு எதுவும் இல்லாது சபை நிதியிலிருந்து ஏற்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு/ முகாமைத்துவ தீறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மானியத்திலிருந்து பெற்ற மற்றும் சபையால் பயன்படுத்திய சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 212 எண்ணிக்கையான நூலகப் புத்தகங்கள் பெறுமதியிடப்பட: இறுதிக் கணக்கில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நடைமுறை நிதியாண்டிற்காக நிலையான வைப்புக்கள் மீதான வட்டி கணிபீடு செய்யப்பட்ட இறுதிக் கணக்கில் வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஈ) இறைச்சிக் கடை குத்தகை தொடர்பில் ரூபா 1,204,403 தொகையான பெறுமதி சேர் வரி சேகரிப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(உ) இறைச்சிக் கடை குத்தகை தொடர்பில் ரூபா 251,742 தொகையான தேசத்தை கட்டியெழுப்புதல் வரி சேகரிப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இறைச்சிக் கடை குத்தகை தொடர்பில் ரூபா 26,998 தொகையான பிடித்து வைத்தல் வரி சேகரிப்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(எ) ஐந்து சூரிய அலுவலகங்களில் இரண்டு செயற்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான சேகரிப்பு

(ஆ) நிலையான சொத்துக்கள்

(இ) கணக்கீடு

(ஈ) வாகனப் பாவணை

(உ) நானாவித வைப்புக்கள்

(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு